செ.வெ.எண்-39 நாள்-23.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித் துறையின் கீழ் நடைபெற்று வரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (23.02.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**இதுக்குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சித்துறை சார்பில் தத்தனூர் ஊராட்சியில் த.குடிகாடு கிராமத்தில் ஒருங்கிணைந்த பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பள்ளிக் கட்டிடக் கட்டுமானப் பணிகளையும், பிரதம மந்திரி ஆவாஷ் யோஜனா வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளையும் ஆய்வு செய்து, பணிகளை துரிதமாக முடிக்க அதிகாரிக்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தத்தனூரில் ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் கட்டுப்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள மரக்கன்று நாற்றங்கால் பசுமை குடில் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், மண்புழு எரு தயாரிக்கும் இடத்தினை பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டது.

முத்துசேர்வார்மடம் ஊராட்சி, சுண்டிப்பள்ளம் கிராமத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிட கட்டுமானப் பணியினை பார்வையிட்டு விரைவாக முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குண்டவெளி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் நடப்பட்ட மரக்கன்றுகளை பார்வையிட்டு, சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதையும், மேலும், மருத்துவர்கள் அளித்த கோரிக்கையான சாலை மற்றும் பழுதடைந்துள்ள கட்டடங்களை சீரமைக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.லோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, உதவி செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.தமிழரசு, திரு.மணிமொழி மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்